

HUMAN RIGHTS WATCH

# “சகோதர உணர்வால் கட்டுண்டார்”

*காவல்துறைக் காவலில் கொலைகளைத் தடுக்கத் தவறிய இந்தியா*

# “சகோதர உணர்வால் கட்டுண்டார்”

## காவல்துறையால் ஏற்படும் காவல்-சாவுகளைத் தடுக்கத் தவறிய இந்தியா

# சுருக்கம்

> குறிப்பிட்ட எதிரியின் (குற்றஞ்சாட்டப்பட்டவரின்) உடலில் காணப்படும் காயங்களைப் பற்றி நான் சொல்ல வேண்டியது இதுதான். அவர் கடுங்குற்றவாளி என்பதால் எந்தத் தகவலும் தர மறுத்து விட்டார். அவரிடமிருந்து அந்தத் தகவலைப் பெறுவது அவசியமாயிருந்தது. அதனால்தான்… [காவல்துறையினர்] "உண்மை தேடும்" கச்சையைப் பயன்படுத்தி, என் எதிரில் அவரை அடித்தனர். அடிக்குப் பின் அவர் மிகவும் பலவீனமாக இருந்தார், தண்ணீர் குடிப்பதற்காக எழுந்த போது வலியால் மயக்கமுற்று சாளரத்தோடு மோதி விழுந்துக் கீழ்த் தாடையை உடைத்துக் கொண்டார்.
>
> --- **ஜாபர் ஷைக் காவல் சாவுப் புலனாய்வில் சாட்சியமளித்த காவல்துறைக் காவலர் கூறியது, மும்பை, 2013 மார்ச்சு.**

> மாநிலப் புலனாய்வு நிறுவனம் நடத்திய முழுப் புலனாய்வுமே காவல்துறை உயரதிகாரிகளுக்கு சங்கடம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக, வேறு வழியின்றி மேற்கொண்ட சேதக் கட்டுப்படுத்தல் நடவடிக்கையாகவே தோன்றுகிறது.
>
> --- ***பிரத்திம் குமார் சிங்கா ரே –எதிர்- இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்,*** **காவல்துறைக் காவலில் நிகழ்ந்த சாவு தொடர்பான ஒரு வழக்கில் கல்கத்தா உயர் நீதிமன்றம், 2013 மே.**

குற்றவாளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் காவலில் சாவது இந்தியாவில் அடிக்கடி நிகழ்கிறது. இந்த நெடுநாளையச் சிக்கலுக்கு மறுவினையாக, நீதிமன்றங்கள், தேசிய மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட இந்திய ஆட்சியாளர்கள் சித்திரவதையையும் கெடுநடத்துமுறையையும் காவல்துறையினர் கையாள்வதைத் தடுக்கவும் தண்டிக்கவும் விவரமான நடைமுறைகளை வகுத்துள்ளனர். ஆனால் பலநேரம் இந்தியக் காவல்துறையினர் சந்தேகக் குற்றவாளிகளைத் தண்டிக்கவும், தகவல் சேகரிக்கவும், ஒப்புதல் வாக்குமூலங்கள் கறக்கவும் சித்திரவதை செய்வது இன்றளவும் தொடர்கிறது.

தேசியக் குற்றப் பதிவுருக் கழகத்தின் கணக்குப்படி, 2010க்கும் 2015க்கும் இடையில் காவல்துறைக் காவலில் இறந்தவர் தொகை 591. காவல்துறையினர் பெரும்பாலான இந்தச் சாவுகள் தற்கொலை, நோய் அல்லது இயற்கைக் காரணங்களால் ஏற்பட்டவை என்கின்றனர். காட்டாக, 2015இல் இந்திய அதிகாரிகள் அறிக்கையிட்ட 97 காவல் சாவுகளில் காவல்துறையின் உடல்வதை வன்செயலால் ஏற்பட்டவையாகக் காவல் துறைப் பதிவுருக்கள் பட்டியலிட்டவை 6 மட்டுமே; தற்கொலைகள் என்று 34; நோய்ச் சாவுகள் என்று 11; இயற்கைச் சாவுகள் என்று 9; மருத்துவமனையில் இருந்த போது அல்லது சிகிச்சையில் இருந்த போது நேரிட்ட சாவுகள் என்று 12. ஆனால் இவ்வாறான பல நேர்வுகளில், சித்திரவதையே சாவுக்குக் காரணம் என்று குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில வழக்குகளில் நீதிமன்றங்களோ மனித உரிமை ஆணையங்களோ பிற அதிகார அமைப்புகளோ புலனாய்வு நடத்த ஆணையிட்ட போதிலும், மனித உரிமைக் கண்காணிப்பகம் அறிந்த வரை, 2010க்கும் 2015க்கும் இடையே ஒரே ஒரு வழக்கில் கூட காவல் சாவுக்கு ஒரு காவல்துறை அதிகாரி குற்றத்தீர்ப்பு பெற்றதில்லை. மும்பையில், இருபது வயது சந்தேகக் குற்றவாளி ஒருவர் 2013ஆம் ஆண்டு காவலில் சாவுற்றதற்கு 2016ஆம் ஆண்டு காவல்துறை ஆட்கள் நால்வர் குற்றத்தீர்ப்பு பெற்றனர்.

இந்த அறிக்கை இந்தியாவில் காவல்-சாவுகளின் தண்டிக்கப்படாத குற்றநிலை தொடர்வதற்கான காரணங்களை அலசி, இதற்கு முற்றுப்புள்ளி வைத்திட ஆட்சியாளர்கள் எடுக்கக் கூடிய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறது. 2009க்கும் 2015க்கும் இடையில் நிகழ்ந்த 17 காவல்-சாவுகள் குறித்து மனித உரிமைக் கண்காணிப்பகம் நடத்திய ஆழமான புலனாய்வுகளையும், இந்திய அமைப்புகள் செய்த ஆராய்ச்சிகளையும், பாதிப்புற்றோரின் குடும்பத்தினர், சாட்சிகள், நீதியியல் வல்லுநர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் மனித உரிமைக் கண்காணிப்பகம் எடுத்த 70க்கு மேற்பட்ட நேர்காணல்களையும் அடிப்படையாகக் கொண்டு சிக்கலின் வீச்சினை இவ்வறிக்கை விவரமாக எடுத்துரைக்கிறது.

இறுதி நோக்கில், காவல் துறையின் முறைகேடு என்பது இந்திய நடுவணரசும் மாநில அரசுகளும் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளைச் செயலாக்கத் தவறி விட்டதன் பிரதிபலிப்பே ஆகும். கண்டிப்பான நெறிமுறைகள் இருப்பினும், கைதானோரைச் சித்திரவதை செய்வதிலும்

மோசமாக நடத்துவதிலும் தொடர்புற்ற காவல்துறை அதிகாரிகள் மீது தீவிரப் புலனாய்வுகள் நடத்தி வழக்குத் தொடுக்க ஆட்சியாளர்கள் தவறி விடுவதே வாடிக்கையாக உள்ளது.

பலநேரம் காவல் துறைப் புலனாய்வாளர்கள் குற்றச்சாட்டுக்கு ஆளான காவல்துறை அதிகாரிகள் தரும் விளக்கங்களை மட்டும் நம்பி வழக்குகளை முடித்து விடுகின்றனர். புது தில்லியிலிருந்து செயல்படும் உரிமைகளமைப்பாகிய காமன்வெல்த் மனித உரிமை முனைவம் காவல் துறைச் சீர்திருத்தம் வேண்டி நீண்ட காலமாக இயக்கம் நடத்தி வருகிறது. அதன் இயக்குநர் மாயா தாருவாலா பேசும் போது, முறைகேடு புரியும் அதிகாரிகளைப் பாதுகாக்க மூடிமறைப்பு வேலைகளில் ஈடுபடுவதைக் காவல்துறை மறுத்த போதிலும், பொறுப்புக்கூறல், மேற்பார்வை இரண்டிலும் கவலைக்குரிய இடைவெளிகள் இருப்பதாகச் சொன்னார்: “கேடான காவல்முறையையும், சட்டப்புறம்பான காவல்முறையையும், கொலைக்கு நிகரான செயலையும் மூடிக்காப்பது தமது செயல்திறனுக்கு மதிப்பளிக்குமா என்பதற்கு ஓர் அமைப்பென்னும் தன்மையில் காவல்துறை விடை காண வேண்டும்.”

இந்த அறிக்கையில் எடுத்துரைக்கப்படும் பெரும்பாலான நேர்வுகளில் வழக்கறிஞர்கள் அல்லது உரிமைக் காப்பாளர்களின் துணைகொண்டு குடும்பத்தினர் நீதித்துறையிடம் தீர்வு நாடினார்கள், இதனால் உரிய பிற ஆவணங்களும் பொதுவெளியில் கிடைக்கும் நிலையில் இருந்தன. பல வழக்குகள் இன்னும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. சிலவற்றில் நீதிமன்ற ஆணைப்படி நடந்துள்ள தற்சார்புப் புலனாய்வுகளில் உடல்வகையில் மோசமாக நடத்தியதற்குத் தெளிவான சான்று கிடைத்திருப்பதோடு கடுமையான வழிமுறை-மீறல்களும் வெளிப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டப்படும் 17 நேர்வுகளில் ஒவ்வொன்றிலும் காவல் துறையினர் – கைது நடவடிக்கையை ஆவணப்படுத்துதல், மருத்துவப் பரிசோதனை செய்தல், சந்தேகக் குற்றவாளியை 24 மணி நேரத்துக்குள் நடுவர்முன் நிறுத்துதல் உள்ளிட்ட -- சரியான கைது நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. இது சந்தேகக் குற்றவாளியை உரிமைமீறலுக்கு இன்னுங்கூட எளிதில் ஆட்படக் கூடியவர் ஆக்கி விடுகிறது. மோசமாக நடத்தி விட்டு அதை மூடி மறைத்து விட முடியும் என்று காவல்துறை நம்பியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த நேர்வுகளில் பெரும்பாலானவற்றில் புலனாய்வு அதிகாரிகள், முக்கியமாகக் காவல்

துறையினர் சாவுகளுக்குப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய உதவக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினர்.

## காவல் துறையினர் முறையான கைது நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுதல்

வழக்கமாக நடப்பது என்னவென்றால், சந்தேகக் குற்றவாளிகளை முதலில் காவலுக்கு அழைத்துவரும் போது சித்திரவதைக்கான வாய்ப்பு அதிகம். எனவேதான் கொடுந்தாக்குதலோ இறப்போ நேரிடாமல் தடுப்பதற்குக் கைது நடைமுறைகள் சரியாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஐதராபாதில் காவல் துறையினர் 2009 ஆகஸ்டு 2ஆம் நாள் பி. ஜனார்த்தனைப் பிடித்த பின் கைது நடவடிக்கையைப் பதியத் தவறினர். அவர் குடும்பத்தினர் ஆகஸ்டு 3ஆம் நாள் காவல்துறைக் காவலில் அவரை பார்த்ததாகச் சொல்கின்றனர்; அன்று நான்கு காவலர்கள் அவரைச் சிறிது நேரம் அவரது வீட்டுக்கு அழைத்து வந்தனராம்; அவருக்குக் கைவிலங்கிட்டிருந்ததாம், அதிகாரிகள் அவரை மீண்டும் மீண்டும் அடித்தார்களாம். 2009 ஆகஸ்டு 4ஆம் நாள் ஜனார்த்தன் காவல்துறைக் காவலில் இருந்த போது இறந்து போனார். காவல்துறையினர் எவ்விதத்தும் தப்புச் செய்ததாக ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனர். குடும்பத்தினரிடம், “நாங்கள் என்ன செய்யட்டும்? அவர் மாரடைப்பால் செத்துப் போனார்” என்றனர். ஆனால் ஜனார்த்தனின் உடலில் காயங்கள் இருந்தன, இவை காவல்துறையினர் அடித்ததால் ஏற்பட்டதாகத் தெரிகிறது என்று அவருடைய சகோதரர் சதானந்து சொல்கிறார். ஜனார்த்தனை இரண்டு நாள் சட்டவிரோதமாகப் பிடித்து வைத்திருந்ததைக் காவல்துறையினர் முதலில் மறுத்தனர். ஆனால் எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்குப் பின், காவல்துறைத் தலைவர் தம் அதிகாரிகள் கடமை தவறியதை ஒப்புக் கொண்டார். ஜனர்த்தனைத் தேடல் நடவடிக்கைக்குக் கொண்டுசென்றதற்குப் பதில் காவல் நிலையத்துக்கு அழைத்துப் போய் அவரது கைதினை உரியவாறு குறித்திருக்க வேண்டும் என்றார்.

கிட்டத்தட்ட இருபதாண்டு முன்னர் 1997இல் *டி.கே. பாசு –எதிர்- மேற்கு வங்காளம்* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் காவல்-முறைகேட்டைத் தடுப்பதற்கென்று வகுத்தளித்த விதிகளை இந்தியக் காவல்துறை பல நேரம் மதித்து நடப்பதில்லை என்பதற்கு ஜனார்த்தன் வழக்கு ஒரு சான்று. இந்த விதிகள் திருத்தப்பட்ட குற்ற நடைமுறைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது முதற்கொண்டு, காவல்துறையினர் ஒருவரைக் கைது செய்யும் போது தங்களைத் தெளிவாக அடையாளங்காட்டிக் கொள்ள

வேண்டும்; கைது நடைபெறும் நாள், நேரம் குறிப்பிட்டுத் தற்சார்பான சாட்சி ஒருவரின் ஒப்பத்துடனும் கைது செய்யப்படுகிறவரின் மேலொப்பத்துடனும் கைதுக் குறிப்பாணை தயாரிக்க வேண்டும்; கைதுச் செய்தியையும் சிறை வைத்துள்ள இடத்தையும் நெருங்கிய உறவினருக்குத் தெரிவிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

விதிகளின் படி, கைது செய்யப்படுகிறவர்களைக் காவலில் எடுத்தபின் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும். அப்போதே உடலில் காயங்கள் இருப்பின் மருத்துவர் அவற்றைப் பட்டியலிட வேண்டும் – புதிய காயங்கள் ஏற்பட்டால் காவலில் இருக்கையில் காவல்துறை முறைகேடு நிகழ்ந்ததைக் காட்டுவதாக இருக்கும். கைது செய்யப்படும் ஒவ்வொருவரையும் 24 மணி நேரத்துக்குள் ஒரு நடுவரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும் என்பது காவல்துறை முறைகேட்டுக்கு மற்றுமொரு முக்கியக் கடிவாளம். கைது தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்து, கைது செய்யப்பட்டவரிடம் நேராகக் கேள்விகள் கேட்டு அவர் நலத்தை உறுதி செய்வது நடுவர் கடமை ஆகும்.

நடைமுறையளவில், இந்தக் காப்பு விதிகள் படுமோசமான காவல்-முறைகேடுகளைத் தடுத்து விடவில்லை. அரசாங்கத் தரவுகளின் படி, 2015ஆம் ஆண்டு நிகழ்ந்த 97 காவல்-சாவுகளில் 67இல், காவல்துறையினர் சந்தேகக் குற்றவாளிகளை சட்டப்படி 24 மணி நேரத்துக்குள் நடுவரிடம் முன்னிலைப்படுத்தத் தவறினர், அல்லது சந்தேகக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்குள் இறந்து விட்டனர்.

அக்னேலோ வல்தரிஸ் என்பவரையும், அவருடைய வழக்குக் கூட்டாளிகள் மூவரையும் 2014 ஏப்ரல் மாதம் மும்பையில் சரக்குகள் திருடியதாக ஒப்புக் கொள்ளச் சொல்லிக் காவல் துறையினர் அடித்தனர். சந்தேகக் குற்றவாளிகள் சட்டப்படிக் கட்டாயம் செய்ய வேண்டிய மருத்துவப் பரிசோதனையின் போது எதுவும் சொல்லக் கூடாது என்று தாங்கள் எச்சரிக்கப்பட்டதாகக் கூறினர். ஆனால் வல்தரிஸ் தன் காயங்கள் காவல் துறையினர் அடித்ததால் ஏற்பட்டவை என்று மருத்துவரிடம் கூறியதாக அவரது மருத்துவ அறிக்கையில் ஒரு பதிவு உள்ளது. ஒரு நடுவரிடம் முன்னிறுத்தப்படுவதற்கு முன்பே, வல்தரிஸ் தப்பியோட முயன்று ரயிலில் அடிபட்டு இறந்து போனதாகக் காவல்துறை சொன்னது – அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டால் இது நம்பும்படியாக இல்லை என்று அவரின் வழக்குக் கூட்டாளி கருதுகிறார். “என் மகன் தனக்கு நிகழ்ந்த சித்திரவதை குறித்து நடுவரிடம் முறையிடுவான் என்றஞ்சிக்

காவல்துறை ஆட்கள் அவனைச் சாகடித்து விட்டார்கள்” என்று வல்தரிசின் தந்தை மனித உரிமைக் கண்காணிப்பகத்திடம் கூறினார்.

ஆனால், புள்ளிவிவரங்களிலிருந்து தெரிவது என்னவென்றால், நடுவர்முன் நிறுத்துவதும் மருத்துவப் பரிசோதனைகள் செய்வதும் பற்றிய விதிகள் சந்தேகக் குற்றவாளிகளை சித்திரவதையிலிருந்து கட்டாயம் காப்பாற்றி விடும் என்பதில்லை. சந்தேகக் குற்றவாளிகள் தாங்கள் மோசமாக நடத்தப்பட்டதைச் சொல்ல அச்சப்படுகிறார்கள். மருத்துவத் துறையினர் தம் பொறுப்புகளைத் தொழில்முறைப்படியும் நடுநிலை தவறாமலும் நிறைவேற்றுவதில்லை. “பல நேரம் காவல் துறையினர் தரும் சில விளக்கங்கள்: கைது செய்யப்பட்டவர் தப்பியோட முயன்றார், அப்போது காயமுற்றார் என்னும் படியாக அமைகின்றன. குற்றஞ்சாட்டப்பட்டவரே கூட எதுவும் சொல்ல மாட்டார். ஏனென்றால் தாம் மீண்டும் காவல் துறைக் காவலுக்கு அனுப்பப்படலாம் என்பதை அவரறிவார்” என்று ஒரு நடுவர் மனித உரிமைக் கண்காணிப்பகத்திடம் சொன்னார்.

காவல்துறை கைது செய்யவும் காவலில் வைக்கவுமான விதிகளை மதித்து நடக்க மறுப்பது சந்தேகக் குற்றவாளிகளைக் கெடுநடத்துமுறைக்கு இன்னுங்கூட எளிதாய் ஆட்படுத்தி விடுகிறது. காவல் விதிகளைத் தவிர்ப்பதற்குக் காவல்துறை பல வழிகளைக் கையாள்வதாகத் தமிழ்நாட்டில் ஒரு நடுவர் முறையிட்டார்.

காவல் துறையினர் தமக்கென்று ஒரு காவல் நடைமுறைச் சட்டம் வைத்துள்ளார்கள். அவர்கள் குற்ற நடைமுறைச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்லை.

## காவல்-சாவுகளுக்குக் காவல் துறையைப் பொறுப்பாக்கத் தவறுதல்

இந்தியச் சட்டப்படி ஒவ்வொரு காவல்-சாவு குறித்தும் நீதித்துறை நடுவர் விசாரணை நடத்த வேண்டும். காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் என்பது எதிர்பார்ப்பு. சாவு குறித்து அதில் தொடர்புற்றிராத ஒரு காவல் நிலையம் அல்லது வேறு முகமை புலனாய்வு செய்ய வேண்டும். மேலும், ஒவ்வொரு காவல்-சாவு வழக்கும் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அறிக்கையிடப்பட வேண்டும். நடுவர் விசாரணை முடிவுகளைத் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு

அறிக்கையிடுவதோடு, பிணக் கூறாய்வு அறிக்கையை அனுப்பி வைப்பதும் காவல்துறையின் கடமையாகும். தேசிய மனித உரிமை ஆணைய விதிகளின் படி பிணக் கூறாய்வைப் படம்பிடிக்கவும், பிணக் கூறாய்வு அறிக்கையை மாதிரிப் படிவத்துக்கிணங்க அணியப்படுத்தவும் வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் பலநேரம் அசட்டை செய்யப்படுவதை மனித உரிமைக் கண்காணிப்பக ஆய்வும், நீதிமன்ற முடிவுகளும், ஊடகச் செய்திகளும் காட்டும். அரசுத் தரவுகளின் படி, 2015இல் தெரிய வந்த 97 காவல்-சாவுகளில் 31 தொடர்பாக மட்டுமே நீதி விசாரணை நடத்தப்பட்டது. 26 நேர்வுகளில் இறந்தவரின் பிணக் கூறாய்வு கூட நடைபெறவில்லை. சில மாநிலங்களில் நீதித்துறை நடுவருக்கு பதில் நிர்வாக நடுவர் புலனாய்வு செய்கிறார். காவல்துறையைப் போலவே நிர்வாக நடுவரும் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர், ஆகவே தற்சார்பில்லாதவர், நடுநிலையாகச் செயல்பட விடால் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய வாய்ப்புகள் அதிகம்.

அடாச் செயலை ஆய்வதற்காகத் துறைக்குள் நடைபெறும் அக விசாரணைகள் காவல் துறையினரைக் குற்றவாளியாகக் காண்பது அரிதே. காவல்துறையும் தொடர்புற்ற காவல் அதிகாரிகளுக்கு எதிராக முறையீடுகள் தாக்கல் செய்ய விடாமல் காலந்தாழ்த்தலாம் அல்லது மறித்து நிற்கலாம். 2015ஆம் ஆண்டு காவல் துறையினர் 97 காவல்-சாவுகளில் 33 தொடர்பாக மட்டுமே வழக்குகள் பதிந்தனர். 2014 வரை தேசிய மனித உரிமை ஆணைய உறுப்பினராயிருந்த சத்தியபிராத்த பால் சொன்னார்:

> காவல்துறை அகப் புலனாய்வின் நோக்கமெல்லாம் உண்மையை மறைத்து வெள்ளையடிப்பதுதான், உண்மையைக் கண்டறிய எதைப் பார்க்க வேண்டுமோ அதைப் பார்க்காமல் வேண்டுமென்றே தவிர்த்து விடுகின்றனர்… காவல் துறைப் புலனாய்வுக்கு அது எழுதப்படும் தாளின் பெறுமானம் கூட இல்லை.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் 2012 ஏப்ரல் 15ஆம் நாள் சியாமு சிங் காவல்துறைக் காவலில் இறந்த பின், சிங் தற்கொலை செய்து கொண்டதாகக் காவல்துறையினர் கூறினர். ஆனால் உடன் கைது

செய்யப்பட்ட அவர் சகோதரர் இருவரையும் கைது செய்த பின் உள்ளாடை வரை அம்மணமாக்கிச் சித்திரவதை செய்தனர் என்றார்:

> “அவர்கள் (காவலர்கள்) எங்களைத் தரையில் கிடத்தினர். நான்கு பேர் என்னை அழுத்திப் பிடித்துக் கொண்டனர். ஒருவர் தொடர்ந்து என் மூக்கினுள் தண்ணீர் ஊற்றினார். எனக்கு மூச்சு முட்டியது. என்னிடம் முடிந்ததும் சியாமுவிடம் தொடங்கினர். சியாமு உணர்விழந்து விட்டார். அவர்கள் கவலைப்படலாயினர், அவர் சாகப் போகிறார் என்று தமக்குள் பேசிக் கொண்டனர். ஒருவர் சிறு பொட்டலம் கொண்டுவந்து சியாமுவின் வாயில் பிரித்துக் கொட்டினார்.”

சியாமு சிங் மருத்துவமனையில் இறந்து போனார். ஒப்புக்கு ஓர் அகப் புலனாய்வு நடத்திய காவல்துறையினர் சித்திரவதையால் சாவு என்னும் குற்றச்சாட்டுகளை மறுதலித்தனர். மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை 2014இல் தொடக்கப் புலனாய்வு நடத்தி, சிங்கைச் சித்திரவதை செய்து நஞ்சூட்டிக் கொன்றதற்கு ஏழு காவல் அதிகாரிகளே பொறுப்பு என்ற முடிவுக்கு வந்தது. ஆனால் ஓராண்டு கழித்துத் தரப்பட்ட இறுதி விசாரணை அறிக்கை அந்த எழுவரையும் குற்றமற்றவர்கள் என்று சொல்லி விட்டது.

காவல்-சாவுகளில் பொறுப்புக் கூறலுக்கு சவாலாயிருக்கிற ஒன்று அரசு மருத்தவர்கள் காவல்துறைக் கூற்றுகளுக்கு ஆதரவாக மனச்சாய்வு கொண்டிருப்பது ஆகும். அடிப்படையே இல்லையெனத் தெரிந்தாலும் நிகழ்வுகள் பற்றிய காவல்துறை விளக்கத்துக்கே பிணக்கூறாய்வு மற்றும் தடயவியல் அறிக்கைகள் ஆதரவாக உள்ளன. மும்பை காவல் நிலையம் ஒன்றில் 2012 டிசம்பர் 2ஆம் நாள் ஜூல்பார் ஷைக் என்னும் முப்பத்தைந்து வயது இளைஞர் இறந்து போனார். பிணக் கூறாய்வில் 21 வெளிக் காயங்கள் இருப்பது தெரிந்தது. ஆனால் இந்தக் காயங்கள் “இறப்பைத் தோற்றுவிக்கப் போதியவை அல்ல” என்று பிணக்கூறாய்வு அறிக்கை தெரிவித்தது. இதை ஏற்றுக் கொண்ட மருத்துவர் குழு ஷைக் மூளைக் காய்ச்சல் நோயாலும் “மூளைநாளக்  குருதியிழப்பாலும்” இறந்தார் என்று கூறி விட்டது. ஆனால், மையப் புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ.) ஒரு புதிய விசாரணையின் பகுதியாக மகாராட்டிர அரசுக்கு வெளியிலிருந்து கேட்டுப் பெற்ற மருத்துவ வல்லுநர் கருத்து அடியுதைக் காயத்தாலும் உடல்வகை முறைகேட்டாலும் ஏற்பட்ட நரம்பியல் அதிர்ச்சியினால் ஷைக் இறந்தார் எனக் கண்டறிந்தது. “காவல்-சாவுக்கு வழக்குத் தொடுப்பதில்

சிக்கல் என்னவென்றால், மருத்துவ அறிக்கை உங்களுக்கு எதிராக அமைந்தவுடனே வழக்கின் கதை முடிந்து விடுகிறது” என்கிறார் ஷைக்கின் வழக்கறிஞர் யுக் மொகித் சௌத்ரி. “மருத்துவ அறிக்கை உங்களுக்கு ஆதரவாக இருக்கும் போதுதான் வாய்ப்புள்ளது.”

காவல்-குற்றங்களைப் பொறுத்த வரை, காவல் துறைக்கு எதிராக சாட்சியம் முன்னிறுத்துவது மிகக் கடினம், காவல் துறையினர் “சகோதர உறவால் கட்டுண்ட” உணர்வுடன் இருப்பதுதான் காரணம் என்று இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுள்ளது.

குற்றங்களுக்குக் காரணமானவர்களைப் பொத்திக் காக்கும் காவல்துறையின் மனவிருப்பம் குறித்து அரசும் நீதிமன்றங்களும் இன்னும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.

தேசிய மனித உரிமை ஆணையமும் மாநில மனித உரிமை ஆணையங்களும் காவல்-கொலை வழக்குகளில் தமக்குரிய மேற்பார்வைப் பங்கினை ஆற்றுவதில் பெரிதும் தவறியுள்ளன. சாட்சிகளை அழைக்கவும், சாட்சியம் முன்னிறுத்தும்படி ஆணையிடவும், அதிகாரிகள் மீது வழக்குத் தொடுக்கும்படி அரசுக்குப் பரிந்துரைக்கவும் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு. ஆனால் நடைமுறையில் அதன் பரிந்துரைகள் பெரும்பாலும் இழப்பீடு அல்லது பிறவகை உடனடி இடைக்கால உதவி வழங்குமாறு அரசை கேட்டுக் கொள்வதோடு சரி. 2012 ஏப்ரலுக்கும் 2015 ஜூனுக்கும் இடையே காவல்துறைக் காவலில் நிகழ்ந்ததாக தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அறிக்கையிடப்பட்ட 432 நேர்வுகளில் ஆணையம் மொத்தம் கிட்டத்தட்ட 22,910,000 ரூபாய் (343,400 அமெரிக்க டாலர்) பண உதவி வழங்கப் பரிந்துரை செய்தது, ஆனால் 3 நேர்வுகளில் மட்டுமே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தது, ஒரு நேர்வில் கூட வழக்குத் தொடுக்கப் பரிந்துரை செய்யவில்லை.

## இறந்தோரின் குடும்பத்தினரையும் சாட்சிகளையும் மிரட்டுதல்

காவல்-சாவு வழக்குகளில் நீதிதேடும் இறந்தோர் குடும்பத்தினர் பலநேரம் உருட்டல் மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவற்றில் பலவும் ஏழைக் குடும்பங்கள், சமூக வகையில் ஒதுக்கப்பட்டவை, எனவே குறிப்பாக இப்படிப்பட்ட அச்சுறுத்தலுக்கு எளிதில் இலக்காகக் கூடியவை. அக்னேலோ வல்தரிஸ் சாவுக்காகக்

காவலர்கள் மீது வழக்குத் தொடுத்த போது, 2015 செப்டெம்பரில் பம்பாய் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது:

> "காவல்துறைக் காவலில் இறந்துள்ள இவர்களில் பெரும்பாலர் சமூகத்தின் அடித்தட்டுகளைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; நீதிமன்றப் பொருட்பாடுகளில் தங்களுக்குப் பொருத்தமான வழக்கறிஞரை ஈடுபடுத்த/அமர்த்தத் துணை செய்யும் அரசுக் கொள்கை பற்றி அறியாதவர்கள்."
>
> மேற்கு வங்க மாநிலத்தில் 2014 பிப்ரவரி 15ஆம் நாள் காய்கறி விற்கும் ராஜீவ் மொல்லா என்ற 21-வயது இளைஞர் கைது செய்யப்பட்டு, அன்றைக்கே காவல்துறைக் காவலில் இறந்து போனார். அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் காவல் துறையினர் கூறிய போதிலும், சித்திரவதையால் இறந்ததாக அவர் மனைவி குற்றஞ்சாட்டினார். இவ்வழக்கில் தான் நீதித் துறைத் தலையீட்டை நாடியதிலிருந்தே அப்பகுதியில் செல்வாக்குமிக்கவர்கள் முறையீட்டைத் திரும்பப்பெறும்படி தன்னை மிரட்டி வருவதாக மொல்லாவின் மனைவி சொன்னார். அவருக்கு ஆதரவளித்து வந்த அரசுசாரா அமைப்பாகிய மானவதிகார் சுரக்ஷா மஞ்ச் (மனித உரிமைப் பாதுகாப்புச் சங்கம் -- MASUM) தன் பணியாளர்களில் ஒருவரும் அச்சுறுத்தப்பட்டு, சிறைவைக்கப்பட்டு, அடிக்கப்பட்டதாகத் தெரிவித்தது.

***

இந்தியா குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கைக்கு ஏற்பிசைவு வழங்கியிருப்பதோடு, சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்திலும் ஒப்பமிட்டுள்ளது. இரண்டுமே சித்திரவதையையும் கொடிய, மனிதத் தன்மையற்ற, இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைமுறையையும் தடை செய்கின்றன. அதிகாரிகள் இவற்றுக்குப் பொறுப்பான அலுவலர்கள் மீது வழக்குத் தொடுக்கவும் அவை வழிவகை செய்கின்றன. இந்த உறுதிப்பாடுகள் சித்திரவதையைக் கண்டித்து, அதற்கு எதிராக நடைமுறைக் காப்புக் கூறுகளை வழங்கும் இந்திய மைய, மாநிலச் சட்டங்களில் பிரதிபலிக்கின்றன.

அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள தன்னுரிமையும் மனிதக் கண்ணியத்துக்கான உரிமையும் "அரசு அல்லது அதன் அலுவலர்கள் சித்திரவதை அல்லது கொடுந்தாக்கு செய்வதற்கு எதிரான உள்ளார்ந்த உத்திரவாதம்" ஆகும் என்று உச்ச நீதிமன்றமும் விளக்கமளித்துள்ளது.

இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள வழக்குகள் பலவற்றில், கெடுநடத்துமுறையைத் தடைப்படுத்துவதற்கென்று வகுக்கப்பட்ட விதிகளைக் காவல்துறை கடைப்பிடித்திருந்தால் காவல்-சாவுகளைத் தடுத்திருக்க முடியும். சந்தேகக் குற்றவாளிகளை மோசமான முறையில் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறையினரை இந்தியாவெங்கும் நீதியின் முன் நிறுத்தியிருந்தால், காவலில் நிகழும் சித்திரவதைச் சாவுகள் ஒருவேளை ஒரேயடியாக ஓய்ந்திருக்கவும் கூடும்.

## முக்கியப் பரிந்துரைகள்

- கைது மற்றும் சிறைப்படுத்தல் தொடர்பாக இப்போதுள்ள சட்டத்தையும், குற்ற நடைமுறைச் சட்டத்தில் காணப்படும் நெறிமுறைகளையும், உச்ச நீதிமன்றத்தின் டி.கே. பாசு தீர்ப்பில் குறிப்பாகச் சிறைவைத்தலைப் பதிவு செய்தல், குடும்பத்தினர்க்குத் தெரிவித்தல், சந்தேகக் குற்றவாளியை நடுவர்முன் நிறுத்துதல், மருத்துவப் பரிசோதனை செய்தல் ஆகியவை தொடர்பாகத் தரப்பட்டுள்ள கட்டளைகளையும் கண்டிப்பான விதத்தில் செயலாக்குக.
- சித்திரவதையிலும் பிறவகைக் கெடுநடத்துமுறையிலும் தொடர்புள்ள காவல் அதிகாரிகள் எந்தத் தரப்படிமையில் இருந்தாலும், பொருத்தம் போல் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுத்திடுக.
- சித்திரவதை மற்றும் பிற வகைக் கொடிய, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடத்துமுறைக்கு எதிரான ஒப்பந்தத்துக்கு ஏற்பிசைவு வழங்கி, அதன் வழிவகைகளை உள்நாட்டுச் சட்டத்தில் சேர்த்துக் கொள்க.
- தக்க நிதி ஒதுக்கி, உருப்படியான முறையில் பாதிப்புற்றவருக்கும் சாட்சிக்குமான பாதுகாப்புச் சட்டம் இயற்றுக.

# பரிந்துரைகள்

முதலாண்டுப் பதவிக் காலத்தில் பிரதமர் நரேந்திர மோதி பொதுமக்களுக்கு உறுதியளித்தார், காவல் படை உணர்ச்சியுள்ளதாகவும், பொறுப்புமிக்கதாகவும், அக்கறையுடன் அணுகக் கூடியதாகவும், சிறந்த பயிற்சி பெற்றதாகவும் திகழும் என்று. காவல்-சாவுகள் குறித்துக் காவல்துறையின் அணுகுமுறை மேம்படுவது பிரதமரின் வெற்றியை அளக்கப் பயன்படும் முக்கியக் குறியீடாக விளங்கும்.

காவல்துறைக் காவலில் ஏற்படும் சாவுகள் மீது இன்னும் நன்றாகக் கவனஞ்செலுத்த வேண்டுமானால் மத்திய அரசு மாநில அரசுகளுடனும் காவல்துறை, குடியியல் சமூக.

அமைப்புகளுடனும் அயல்நாட்டுக் கொடையாளர்களுடனும் பொதுமக்களுடனும் சேர்ந்து செயல்பட்டு, கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செயலாக்க வேண்டும். (காவல் துறைச் சீர்திருத்தத்துக்கான பரிந்துரைகள் அடங்கிய முழுப் பட்டியல் தேவையெனில் பார்க்க: 2009 மனித உரிமைக் கண்காணிப்பக அறிக்கை, முறிந்த அமைப்பு: இந்தியக் காவல்துறையில் பணிக்குளறுபடி, முறைகேடு, தண்டிக்கப்படா குற்றநிலை).

## இந்திய நாடாளுமன்றத்துக்கு

- சித்திரவதை மற்றும் பிற வகைக்கொடிய, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைமுறைக்கு எதிரான ஒப்பந்தத்துக்கு ஏற்பிசைவு வழங்கி, அதன் வழிவகைகளை உள்நாட்டுச் சட்டத்தில் சேர்த்துக் கொள்க.
- கட்டாயக் காணாமற்போகச் செய்தலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு ஒப்பந்தத்துக்கு ஏற்பிசைவு வழங்குக.
- சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தம், மற்றும் பிற பன்னாட்டு ஒப்பந்தங்கள், செந்தரங்களுக்கு ஏற்பச் சித்திரவதை, கட்டாயக் காணமற்போகச் செய்தல் ஆகிய குற்றவியல் குற்றங்களை உட்படுத்தி இந்தியத் தண்டனைச் சட்டத்தைத் திருத்துதல்.
- தக்க நிதி ஒதுக்கி, பாதிப்புற்றவருக்கும் சாட்சிக்கும் உருப்படியான முறையில் பாதுகாப்புச் சட்டம் இயற்றுக.

- தற்போக்கான சிறைப்படுத்தல், சித்திரவதை, நீதித்துறைக்கு அப்பாற்பட்ட கொலைகள், பிற குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளில் காவல்துறைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்குமுன் அரசிடம் ஒப்புதல் பெறத் தேவையில்லை என்பதைத் தெளிவாக்கும் பொருட்டு, குற்ற நடைமுறைச் சட்டத்தின் 197ஆம் பிரிவைத் திருத்தியமைத்திடுக்க. 197ஆம் பிரிவைத் திருத்தியமைப்பதற்கு முன், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளுக்கேற்ப "அதிகாரவழிக் கடமை" என்பதற்கு விளக்கம் தந்து, தற்போக்கான சிறைப்படுத்தல், சித்திரவதை, நீதித்துறைக்கு அப்பாற்பட்ட கொலைகள் போன்ற நடத்தையை அதிலிருந்து விலக்கி வைத்திடுக.
- தேசிய மனித உரிமை ஆணையத்தின் புலனாய்வுப் பணியாளர் தொகையை அதிகப்படுத்த ஆதரவு தருக.
- மற்ற ஆணையங்கள்முன் நிலுவையிலுள்ள மீறல்களை அல்லது முறையீடு தாக்கல் செய்வதற்கு ஓராண்டு முன்பு நிகழ்ந்தவற்றை தேசிய மனித உரிமை ஆணையம் விசாரிப்பதற்கு இடமளிக்கும் வகையில் மனித உரிமைப் பாதுகாப்பு (திருத்த) சட்டத்தின் 36ஆம் பிரிவைத் திருத்துக.

## இந்திய ஒன்றிய உள்துறை அமைச்சகம், ஒன்றிய ஆட்சிப்புல (யூனியன் பிரதேச) காவல்துறை, மாநில உள்துறை அமைச்சகங்கள், மாநிலக் காவல்துறை ஆகியவற்றுக்கு

*கைது செய்தல், சிறை வைத்தல் தொடர்பாக இப்போதுள்ள சட்டத்தைச் செயலாக்குக*

- கைது மற்றும் சிறைவைப்பு தொடர்பாக இப்போதுள்ள சட்டத்தையும், குற்ற நடைமுறைச் சட்டத்தில் காணப்படும் நெறிமுறைகளையும், உச்ச நீதிமன்றத்தின் டி.கே. பாசு தீர்ப்பையும் கண்டிப்பான முறையில் செயலாக்குக. காவல்துறையினர் தாம் செய்யும் கைதுகள், சிறைவைப்புகள் அனைத்தையும் பதிவு செய்யவும், கைது செய்யப்பட்டவரின் உறவினருக்குத் தாமதமின்றித் தகவல் சொல்லவும், சந்தேகக் குற்றவாளிகளை 24 மணி நேரத்துக்குள் நடுவர்முன் நிறுத்தவும், காவலில் அவர்களுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனை செய்யவும் வேண்டிய தேவையைப் பயிற்சியிலும் நடைமுறையிலும் வலியுறுத்துக.

- சித்திரவதையிலும் பிறவகைக் கெடுநடத்துமுறையிலும் தொடர்புள்ள காவல் அதிகாரிகள் எந்தத் தரப்படிமையில் இருந்தாலும், பொருத்தம் போல் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுத்திடுக.
- காவல்துறைக் காவலில் சித்திரவதை அல்லது பிறவகைக் கெடுநடத்துமுறையைப் பயன்படுத்துவது ஏற்கத்தகாதது, சட்டப்புறம்பானது, அது சகித்துக் கொள்ளப்படாது என்பதை அறிக்கைகள், நடவடிக்கைகள் ஊடாக அரசு அதிகாரிகளும் உயர்மட்டக் காவல் அதிகாரிகளும் தெளிவாகவும் ஐயந்திரிபறவும் காட்டிக்கொள்க. காவல்துறை விதிகளிலும் கையேடுகளிலும் பன்னாட்டுச் செந்தரங்களுக்கிணங்க ஏற்கத்தக்க விசாரணை நுட்பங்களை வெளிப்படையாக வரையறை செய்க.
- சந்தேகக் குற்றவாளி ஒருவரைக் கைது செய்தவுடன், அல்லது ஏதேனும் ஒரு வகையில் முறைசாராக் காவலில் வைத்தவுடன், டி.கே. பாசு தீர்ப்பின் படியும் குற்ற நடைமுறைச் சட்டத்தில் கண்டுள்ள படியும் அவருக்குள்ள அடிப்படை உரிமைகளை காவல்துறையினர் அவரிடம் வாசித்துக் காட்டச் செய்க. பாசு வாசிப்பின் பகுதியாகக் குற்றச்சாட்டைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும், ஒரு சட்டத்தரணியைக் கலந்து கொள்ளவும், சிறைவைப்பு குறித்து மற்றவர்களுக்குத் தகவல் தரவும், மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளவும் சந்தேகக் குற்றவாளிக்குள்ள உரிமையையும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
- காவல் நிலையக் கொட்டடிகள் உள்ளிட்ட சிறையடைப்பு வசதிகளை மனித உரிமை ஆணையங்களும் குடியியல் உரிமைக் குழுக்களும் தற்சார்பாகக் கண்காணிக்க விடுக. காவலில் இருப்பவர்கள் கண்காணிப்பு மேற்கொள்ளும் தற்சார்பான அமைப்புகளின் பிரதிநிதிகளைத் தனிப்படச் சந்திக்க அனுமதிக்க வேண்டும்.
- சித்திரவதை, கெடுநடத்தைமுறை பயன்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டி, நகரங்களில் காவல்துறை, குறிப்பாகக் கொலை போன்ற கடுங்குற்றங்கள் தொடர்பான வழக்குகளில், விசாரணைகளைக் காணொளிப் பதிவு செய்யக் கோருவது குறித்துக் கருதிப்பார்த்திடுக.
- காவலில் இருக்கும் பெண்களிடமும் பாலியல் சிறுபான்மையினரிடமும் குழந்தைகளிடமும் சரிவர நடந்து கொள்வது குறித்துக் காவல்துறையினர்க்குப் பயிற்சி தர குடியியல் சமூகக் குழுக்களுடன் சேர்ந்து உழைத்திடுக.

- சட்டச் செயலாக்க அலுவலர்களுக்கான ஐநா நடத்தைநெறி, சட்டச் செயலாக்க அலுவலர்கள் வன்முறை மற்றும் சுடுகருவிகளைப் பயன்படுத்துவது பற்றிய ஐநா அடிப்படைக் கொள்கைகள் உள்ளிட்ட பன்னாட்டுச் சட்டத்திட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கைதுகளின் போதான வன்முறைப் பயன்பாடு குறித்தக் காவல் துறைச் சட்டங்களையும் கையேடுகளையும் திருத்துக. குறிப்பாக, காவல்துறையினர் வன்முறையைப் பயன்படுத்துமுன் முடிந்த வரை வன்முறையல்லாத வழிகளைப் பயன்படுத்துமாறும்,
- குற்றச்செயலின் தகவுக்கேற்ப மட்டுமே வன்முறைப் பயன்பாட்டை நாடுமாறும், உயிர்காக்கக் கண்டிப்பாகத் தவிர்க்கவியலாத போது மட்டுமே உயிராபத்தான வன்முறை பயன்படுத்துமாறும் கட்டளையிடுக.
- ஒவ்வொரு காவல் நிலையத்தின் தாழ்வாரம், அறை, கொட்டடி ஒவ்வொன்றிலும் சுழலும் படக் கருவிகளுடன் அடைப்புச் சுற்றுத் தொலைக்காட்சி (சிசிடிவி) பொருத்திப் பராமரித்திடுக. சிசிடிவி பதிவுகளை ஓராண்டு காலம் பாதுகாக்க வேண்டும். சிசிடிவி எல்லா நேரமும் இயங்குவதை காவல் நிலையத்துக்குப் பொறுப்பு வகிக்கும் மூத்த அதிகாரி உறுதி செய்ய வேண்டும்.
- காவல்-சாவு வழக்குகளில் மாநில அரசு ஒரு சிறப்பு வழக்குத் தொடுநரை அமர்த்த வேண்டும்.
- காவல் நிலைய மட்டத்திலேயே சட்ட உதவி வழங்குவதன் மூலம் வழக்கறிஞர் வைத்துக் கொள்ளும் உரிமை சந்தேகக்
- குற்றவாளிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்க.

## *காவல்-சாவுகள் குறித்தான நடைமுறைகளைச் செயலாக்குக*

- காவல்-சாவுகள் தொடர்பான தேசிய மனித உரிமை ஆணையத்தின் திருத்திய நெறிமுறைகளைக் காவல்துறை விதிகளிலும் கையேடுகளிலும் சட்டமுறைப்படுத்துக. குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளைச் செயலாக்கி, அதற்கேற்ப காவல்துறைக்குப் பயிற்சி தருக. குறிப்பாக, காவல்-சாவு ஏதும் நேரிட்டால் உடனடியாகத் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கும் உரிய மாநில மனித உரிமை ஆணையத்துக்கும் அறிக்கையிடுக.
- காவல்-சாவு வழக்குகள் அனைத்திலும், உடனடியாகவும் விதிவிலக்கின்றியும் இறந்தவர் உடலைப் பிணக்கூறாய்வுக்கு அனுப்பிடுக.

## *காவல்துறையின் கெடுநடத்தைக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்க*

- உச்ச நீதிமன்றக் கட்டளைகளுக்கு இணங்கக் காவல்துறை முறையீட்டு ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதையும், அவை மாநில, மாவட்ட மட்டங்களில் இயங்குவதையும் உறுதி செய்க. இந்த ஆணைக்குழுக்களில் குடியியல் சமூகப் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். இவை தம் வழக்குச் சுமைகளைத் திறம்பட மேலாண்மை செய்வதற்குத் தேவையான திறனுடையவையாக இருக்க வேண்டும். காவல்துறை முறையீட்டு ஆணைக்குழு அதிகாரி ஒருவருக்கு எதிரான முறையீட்டை நிலைநிறுத்தி, அந்த அதிகாரி மீது அக ஒழுங்கு-நடவடிக்கை இல்லையென்றால், காவல்துறை வெளிப்படையாக விவரமான நியாயம் சொல்ல வேண்டும். காவல்துறை முறையீட்டு ஆணைக்குழு எடுத்துக் கொள்ளும் எல்லா முறையீடுகளும் தாமாகவே மீளாய்வுக்காக உள்ளூர் வழக்குத்தொடுநர் ஒருவருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- புலனாய்வின் நிலை குறித்து சரிபார்த்துக் கொள்ள வேண்டி முறையீட்டாளர்களுக்குத் தெளிவான கட்டளைகளும், எளிய படிவங்களும், ஒரு தொலைபேசித் தொடர்பு எண்ணும் தருக. முறைகேடுகளின் போது உடனிருந்த பிற காவல்துறையினர் உட்பட பாதிப்புற்றோரும் சாட்சிகளும் காவல்துறையின் கெடுநடத்தையைத் தெரிவிக்கப் பெயர்சொல்லா முறையீட்டுத் தொலைபேசி வழி ஏற்படுத்துவது குறித்துக் கருதிப்பார்த்திடுக.
- புலனாய்வுச் செயல்வழியின் போதான காவல் முறைகேட்டிலும் உயிரிழப்பிலும் பாதிப்புற்றவர்களின் சட்ட, சமூக, மருத்துவ, உளத்தியல் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு மாநில மட்டத்தில் ஒரு செயலகம் நிறுவுக.

## *பொறுப்புக்கூறலுக்குப் புறப் பொறிமுறைகளுக்கு உரமேற்றுக*

- எந்நிலையிலும் மாநில மனித உரிமை ஆணையங்கள் போன்ற புற முகமைகள் ஆணையிட்ட புலனாய்வுகள் முறையீட்டில் தொடர்புற்ற அதே காவல் நிலையக் காவல் துறைக்கு அனுப்பப்படாது என்பதை நிறுவுக.
- முறைகேடுகள் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறையை இடமாற்றல் செய்யும் வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திடுக; இந்த வழக்கத்தால் பிற குடிமக்களுக்குத்தான் ஆபத்து.

காவல்துறை அதிகாரிகள் காவல்-முறைகேடு தொடர்பான ஏதேனுமொரு முதல் தகவல் அறிக்கையில் அடையாளப்படுத்தப்படும் போது, நிகழ்ச்சியைப் புலனாய்வு செய்து தீர்வு காணும் வரை அவர்கள் இடைநீக்கம் செய்யப்படுவதை நிறுவுக.

## *பொறுப்புக்கூறலுக்கு வலுவான அகப் பொறிமுறைகள் நிறுவுக*

- காவல்-சித்திரவதை மற்றும் சாவு வழக்குகள் அனைத்திலும், சாவில் முடியும் காவல்துறைத் துப்பாக்கிச்சூடுகள் அனைத்திலும் ஓராண்டுக் கட்டாயக் கால வரம்புக்குள் தாமதமின்றியும் நடுநிலையாகவும் புலனாய்வு செய்திட மாநில அளவில் ஒரு தற்சார்பான உள்விவகார அல்லது "தொழில்முறைப் பொறுப்புச்" செயலகம் நிறுவுக. தேசிய மனித உரிமை ஆணையம் போன்ற அரசாங்கப் புற முகமைகளுக்கு விடப்படும் குற்றச்சாட்டுகளால் அகப் புலனாய்வுகள் தூண்டப்பட வேண்டும்.
- டி.கே. பாசு நெறிமுறைகளும் குற்ற நடைமுறைச் சட்டத்தில் உள்ள அதே போன்ற வழிவகைகளும் கடைப்பிடிக்கப்படுவதைக் கண்காணித்திடுக. காவல் கொட்டடிகளில் எழுந்தமானச் சோதனைகள் நடத்தவும், டி.கே. பாசு நெறிமுறைகளைக் காவல்துறை தொடர்ந்து அல்லது திரும்பத் திரும்ப மீறுவது பற்றிய குற்றச் சாட்டுகளுக்கு ஆவன செய்யவும் மாநில அளவில் ஒரு தற்சார்பான உள்விவகார அல்லது "தொழில்முறைப் பொறுப்புச்" செயலகத்துக்கு அதிகாரமளித்திடுக.

## *காவல்துறையை மேற்பார்வையிடும் பொறுப்பு நிறுவுக*

- மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு, அவர்கள் மேற்பார்வையில் உள்ள அதிகாரிகள் புரியும் மீறல்களை இனங்காணவும் தடுக்கவும் பொறுப்புக் கூறலை உறுதி செய்யவும், டி.கே. பாசு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கவும் அவர்களே பொறுப்பு என்று அறிவுறுத்தும் கட்டளைகள் பிறப்பித்திடுக.
- சித்திரவதைச் செயல்கள் அல்லது உயிரிழப்புகள் பற்றி அறிந்த அல்லது அறிந்திருக்க வேண்டிய உயர் அதிகாரிகள் அவற்றைத் தடுக்க அல்லது தண்டிக்க நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால் அவர்களைப் பொருத்தம் போல் ஒழுங்கு நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுப்புக்கு உட்படுத்துக.

## *அகக் கட்டுப்பாட்டை உயர்த்துக*

- காவல்துறைக் கெடுநடத்தை என்பதை வரையறுத்தும், தண்டனைகளைக் குறித்துரைத்தும் ஒரு விவரமான திட்டம் நிறுவுக. அதிகாரிகள் மீது வெவ்வேறு காவல் நிலையங்களில் ஒழுங்குக் கட்டுப்பாடு விதிப்பதில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைந்தபட்சமாக்கும் பொருட்டு, அதிகாரிகள் பல்வேறுபட்டக் குற்றங்களுக்கும் எதிர்பார்க்க வேண்டிய தண்டனை வகைகளை விவரிக்கும் ஒழுங்குநிரல் அல்லது அட்டவணை போன்ற ஒன்றாக அத்திட்டம் அமைத்திடுக. தொடரும் ஒழுங்கு-நடவடிக்கைகள் அல்லது புலனாய்வுகள் தொடர்பாக அவ்வப்போது பொதுமக்களுக்கு அறிக்கைகள் தருக.
- எந்நிலையிலும் எந்த மீளாய்வு முகமை அல்லது அதிகாரியும் ஒரு முறையீட்டாளரைத் தடுக்கவோ மிரட்டவோ முயலக் கூடாது, அப்படிச் செய்தால் ஒழுங்கு நடவடிக்கை அல்லது குற்றவியல் தண்டனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெளிவாக்கும் கொள்கை நிறுவுக.
- காவல்துறைச் சீர்திருத்தங்கள் பற்றிய 2000ஆம் ஆண்டுப் பத்மநாபையா குழு பரிந்துரைத்தவாறு புலனாய்வு அதிகாரிகளின் (உதவி ஆய்வாளர்) எண்ணிக்கையை உயர்த்துக. காவல்துறையின் புலனாய்வு, சட்டம்-ஒழுங்குப் பணிகளைப் பிரித்து, பயிற்சி பெற்ற அதிகாரிகளின் முக்கியப் பங்கினை முழுக்க முழுக்கப் புலனாய்வுக் கடமைகளுக்கே ஒதுக்கும் வகையில் பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையைச் செயலாக்குக.

## *அறிவியல் புலனாய்வு முறைகளில் பயிற்சி தருக*

- காவல்துறைக் கல்விக் கழகங்களில் புலனாய்வு அதிகாரிகளுக்குரிய ஒரு கல்வித் திட்டத்தைச் செயலாக்குக. தடயவியல் அறிவியல் கற்றுத்தரத் தகுதிபடைத்த ஆசிரியர்களை ஈர்த்திட ஆவன செய்க.
- சந்தேகக் குற்றவாளிகளிடமும் சாட்சிகளிடமும் வினாத் தொடுத்து விசாரிக்க வலுவந்தமில்லாத நவீன நுட்பங்களில் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பயிற்சி தருக.
- காவலர்களுக்கான காவல்துறைக் கல்விக் கழகக் கல்வித் திட்டத்தை மீளாய்வு செய்து, உரிய சட்டங்களிலும் காவல்துறையின் சட்டக் கடமைகளிலும் கூடுதலான கல்வி புகட்டுக. தடயவியல் அறிவியலுக்கான அறிமுகத்தை பயிற்சியில்

சேர்த்து, உருப்படியான சான்றுகள் திரட்டுவதிலும் காப்பதிலும் புலனாய்வு அதிகாரிகளுக்கு அவர்கள் உதவுவதை உறுதி செய்க.

### *காவல்-சாவுகளில் பலியானவர்களின் குடும்பத்தினரையும் சாட்சிகளையும் பாதுகாத்திடுக*

- காவல்-சாவுகளில் பலியானவர்களின் குடும்பத்தினரையும் சாட்சிகளையும் எவ்வகை அச்சுறுத்தல், நெருக்குதல், ஆசைகாட்டல், வன்முறை, அல்லது வன்முறை மிரட்டல்களுக்கும் எதிராகப் பாதுகாக்க அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- புலனாய்வு அதிகாரியும் அந்தந்தக் காவல் நிலையப் பொறுப்பதிகாரியும் பலியானவர்களின் குடும்பத்தினரும் சாட்சிகளும் அச்சுறுத்தல், நெருக்குதல், ஆசைகாட்டல், வன்முறை, அல்லது வன்முறை மிரட்டல்கள் என்று குற்றஞ்சாட்டி வாய்மொழியாகவோ எழுத்துவடிவிலோ தரக் கூடிய எல்லா முறையீடுகளும் பதியப்படுவதை உறுதி செய்ய வேண்டும். முறையீட்டாளருக்கு முதல் தகவல் அறிக்கையின் நிழற்படி இலவயமாகத் தர வேண்டும்.

## தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு

- தேசிய மனித உரிமை நிறுவனங்களின் ஆசிய-பசிபிக் மன்றம் வகுத்த குறைந்தபட்சப் புலன்வினவல் செந்தரங்களை அடிப்படையாகக் கொண்டு காவல்துறைக் காவலில் சித்திரவதையைத் தடுப்பது பற்றிய நெறிமுறைகள் பிறப்பித்திடுக.
- காவல்-சித்திரவதை மற்றும் மோதல்-சாவுகள் பற்றிய நெறிமுறைகள் செயலாக்கப்படுவதைக் கண்காணித்திடுக.
- குற்ற நடைமுறைச் சட்டத்தின் 176(1A) பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, காவல்துறைக் காவலில் நேரிடும் எல்லாச் சாவுகளும் நீதித்துறை நடுவரால் புலனாய்வு செய்யப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக்குக.
- ஒவ்வொரு காவல்-சாவு வழக்கிலும் தேசியச் சட்டச் சேவைகள் ஆணையம் அல்லது மாநிலச் சட்டச் சேவைகள் ஆணையம் உதவுவதை உறுதி செய்க. மாவட்ட அல்லது கோட்ட அளவிலான சட்டச் சேவை ஆணையங்கள் ஒவ்வொரு காவல்-சாவு வழக்கிலும் கவனஞ்செலுத்தி இறந்தவர் குடும்பம் சார்பில் உண்மையறியும் புலனாய்வு நடத்த வேண்டும். புலனாய்வு அறிக்கை தேசிய மனித

உரிமை ஆணையத்துக்கும், மாவட்ட காவல்துறை முறையீட்டு ஆணைக் குழு இருக்குமிடத்து அதற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- தேசிய மனித உரிமை ஆணையத்திடம் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு மாற்றி விடும் வழக்கத்தை – அப்படிச் செய்ய முறையீட்டாளர்கள் வெளிப்படையாக இசைவு தராவிட்டால் – கைவிடுக. அவர்களின் முறையீடுகளைத் தேசிய மனித உரிமை ஆணையம் இன்னுங்கூட நியாயமாக விசாரிக்கக் கூடும்.
- ஒரே வழக்கிற்குப் பற்பல முறையீடுகள் தாக்கல் செய்யும் வழக்கத்தைக் கைவிடுக. ஒரு காவல் வன்முறை மற்றும் சாவு வழக்கு தொடர்பான எல்லா முறையீடுகளும் ஒன்றுசேர்க்கப்பட்டு, எளிதில் மேற்செய்திகள் தேடிப்பிடிக்கக் கூடியவாறு ஒரே எண் கொண்டிருக்க வேண்டும்.
- உரிமை மீறலால் பாதிப்புற்றவர்களுக்கு இடைக்கால இழப்பீடு தர ஆணையிட்டவுடன் புலனாய்வை மூடி விடும் வழக்கத்தைக் கைவிடுக.
- புலனாய்வு தொடரும் போதே காவல்-வன்முறையால் பாதிப்புற்றவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சட்ட, சமூக, மருத்துவ, உளத்தியல் தேவைகளில் கவனஞ்செலுத்துக.
- பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் தேசிய மனித உரிமை ஆணையத்தை இன்னுங்கூட எளிதில் அணுகத்தக்கவாறு கள அலுவலகங்கள் நிறுவுவது அல்லது மாநில மனித உரிமை அலுவலகங்களில் அல்லது அருகில் தேசிய மனித உரிமைப் பணியாளர்களை இடம் பெறச் செய்வது குறித்துக் கருதிப்பார்த்திடுக.
- குற்ற நடைமுறைச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் உரிய செந்தரங்களில் பணியாளர்களுக்குப் பயிற்சி தருக.
- நடுவர் அல்லது காவல்துறையின் விசாரணை அறிக்கைகளையே பெரிதும் சார்ந்திராமல் காவல்-சாவுகள் குறித்து இன்னுங்கூட தற்சார்பான புலனாய்வுகள் நடத்துக.
- கடந்த 2011 முதல் அணியம் செய்யப்பட ஆண்டு அறிக்கைகளை பொதுமக்களுக்கு வெளியிடுக. வருங்கால அறிக்கைகளையும் அவை அணியம் செய்யப்பட்டு ஓராண்டுக்குள் பொதுமக்களுக்கு வெளியிடுக.

## மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு

- காவல்துறையைக் கண்காணிப்பதற்கென்று ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தி, அப்பிரிவு காவல் நிலையங்களைப் பார்வையிட்டு, தொடரும் முறையீடுகளுக்கு மறுவினையாற்ற அதிகாரமளித்திடுக.
- வரப்பெற்று நிலுவையிலிருக்கும் முறையீடுகளின் எண்ணிக்கை, அவற்றின் மீது மேற்கொண்ட நடவடிக்கைகள், அறிக்கைகள் உட்பட ஆண்டுதோறும் பொதுமக்களுக்குத் தகவல் தருக.
- முறையீட்டாளர்களுக்கு அவர்களின் முறையீடுகளுக்கான காவல்துறை மறுமொழியின் படியொன்று வழங்கி, முறையீட்டாளர்கள் அதற்கு மீண்டும் மறுமொழி சொல்ல வாய்ப்பு வழங்குக.
- உரிய குற்ற நடைமுறைச் சட்ட, மனித உரிமைச் சட்டச் செந்தரங்களில் பணியாளர்களைப் பயிற்றுக.

## சட்டச் சேவை ஆணையங்களுக்கு

- குற்றஞ்சாட்டப்பட்டவர் காவல்-முறைகேடு குறித்து முறையிடும் எல்லா வழக்குகளிலும் அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் உதவிடக் குற்றவியல் வழக்கறிஞர் அமர்த்துக. தேசியச் சட்டச் சேவைகள் ஆணையம் அல்லது மாநிலச் சட்டச் சேவைகள் ஆணையத்தால் அமர்த்தப்படும் சட்ட அறிவுரைஞர் தேசிய மனித உரிமை ஆணையத்துடன் தொடர்பாளராகச் செயல்பட்டு, தொடர்ந்து கொண்டிருக்கும் வழக்குகளில் மேற்செய்திகள் வழங்கலாம்.
- காவல்துறைக் காவலில் இருப்பவர்களுக்கு உடனுக்குடன் சட்டச் சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்து நெறிமுறைகள் பிறப்பித்திடுக.

## அயல் அரசுகளுக்கும் கொடையாளர்களுக்கும்

- தனியாட்கள் அனைவருக்குமான காவல்துறையின் நடத்துமுறை பன்னாட்டு மனித உரிமைச் செந்தரங்களுக்கு இசைவாக இருப்பதை உறுதி செய்யும்படி இந்திய அரசை வலியுறுத்துக.
- பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சிக்கும் உதவிக்குமாக இப்போதுள்ள செயல்திட்டங்களோடு கூட, காவல்துறைக்கு சிறப்பு மனித உரிமைப் பயிற்சி வழங்குவதற்கு ஆதரவு தருக.
- திறமான மனித உரிமைக் கண்காணிப்பிலும் காவல்-முறைகேட்டால் பாதிப்புற்றோருக்கு நேராக உதவி வழங்குவதிலும்

ஈடுபட்டுள்ள இந்தியக் குடியியல் சமூக அமைப்புகளுக்கு அதிக அளவில் ஆதரவு வழங்குக.

- சித்திரவதைப் பயன்பாடு தொடர்வது குறித்தும் காவல்துறைச் சீர்திருத்தங்கள் செய்யப்படாமை குறித்தும் 2017ஆம் ஆண்டு இந்தியாவின் வரவிருக்கும் அனைத்துலகக் காலவட்ட மீள்பார்வையின் போது கவலைகள் எழுப்புக.
- சித்திரவதை, பிற வகைக் கொடிய, மனிதத் தன்மையற்ற, அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைமுறை பற்றிய ஐநா சிறப்பு அறிக்கையாளரை இந்தியாவுக்கு உண்மையறியும் வருகை புரிய அழைக்குமாறு ஊக்கம்தருக.

# “சகோதர உணர்வால் கட்டுண்டார்”

***காவல்துறைக் காவலில் கொலைகளைத் தடுக்கத் தவறிய இந்தியா***

இந்தியக் காவல்துறையினர் சந்தேகக் குற்றவாளிகளைத் தண்டிக்கவும், தகவல் சேகரிக்கவும், ஒப்புதல்-வாக்குமூலங்கள் கறக்கவும் பலநேரம் சித்திரவதையைப் பயன்படுத்துகின்றனர். சட்டங்களிலும் நெறிமுறைகளிலும் மாற்றங்கள் செய்திருப்பினும், 1997 முதலே காவல்துறைச் சீர்திருத்தங்களுக்கு உறுதி தரப்பட்டிருப்பினும், 2010க்கும் 2015க்கும் இடையில் குறைந்தது 591 பேர் காவல்துறைக் காவலில் உயிரிழந்தனர் என்பது அதிகாரவழித் தரவுகளிலிருந்து தெரிகிறது. காவல்துறையினர் பெரும்பாலான இந்தச் சாவுகள் தற்கொலை, நோய் அல்லது இயற்கைக் காரணங்களால் ஏற்பட்டவை என்கின்றனர். ஆனால் இவ்வாறான பல நேர்வுகளில் இந்தச் சாவுகள் சித்திரவதையால் ஏற்பட்டவை என்று குடும்பத்தினர் சொல்கின்றனர்; சிலநேரம் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தற்சார்பான புலனாய்வுகளும் துணைநிற்கின்றன.

“சகோதர உணர்வால் கட்டுண்டார்” என்னும் இந்த நூல் இந்தியாவில் காவல்-சாவுகளுக்குத் தண்டிக்கப்படாக் குற்றநிலை தொடர்வதற்கான காரணங்களை அலசி, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பரிந்துரைக்கிறது. இது 2009க்கும் 2015க்கும் இடையில் நடைபெற்ற 17 காவல்-சாவுகள் குறித்து மனித உரிமைக் கண்காணிப்பகம் நடத்திய ஆழமான புலனாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு இச்சிக்கலின் வீச்சை விவரமாக எடுத்துரைக்கிறது. பெரும்பாலான இந்நேர்வுகளில் குடும்பத்தினர் வழக்கறிஞர்களிடமும் செயற்பட்டாளர்களிடமும் உதவிபெற்று புதிய விசாரணைகள் கேட்க முடிந்தது. இதனால் சாட்சி வாக்குமூலங்கள், பிணக் கூறாய்வு அறிக்கைகள், அல்லது காவல்துறை வாக்குமூலங்களைப் பார்வையிட முடிந்தது

இந்தப் 17 நேர்வுகளில் ஒவ்வொன்றிலும் காவல்துறையினர் – கைது நடவடிக்கையை ஆவணப்படுத்துதல், மருத்துவப் பரிசோதனை செய்தல், சந்தேகக் குற்றவாளியை 24 மணி நேரத்துக்குள் நடுவர்முன் நிறுத்துதல் உள்ளிட்ட -- சரியான கைது நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. இது சந்தேகக் குற்றவாளியை உரிமைமீறலுக்கு இன்னுங்கூட எளிதில் ஆட்படக் கூடியவர் ஆக்கி விடுகிறது. மோசமாக நடத்தி விட்டு அதை மூடி மறைத்து விட முடியும் என்று காவல்துறை நம்பியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த நேர்வுகளில் பெரும்பாலானவற்றில் புலனாய்வு அதிகாரிகள், முக்கியமாகக் காவல் துறையினர் சாவுகளுக்குப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய உதவக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினர்.

கைது மற்றும் சிறைப்படுத்தல் தொடர்பாக இப்போதுள்ள சட்டத்தையும் நெறிமுறைகளையும் கண்டிப்பான விதத்தில் செயலாக்குமாறும், சித்திரவதையிலும் பிறவகைக் கெடுநடத்துமுறையிலும் தொடர்புற்ற காவல் அதிகாரிகள் எந்தத் தரப்படிமையில் இருந்தாலும், பொருத்தம் போல் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுப்பதை உறுதி செய்யுமாறும் மனித உரிமைக் கண்காணிப்பகம் இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.



ஜனவரி 2016 இல் இந்தியாவின் தலைநகர் புது தில்லியில் உள்ள காவல்துறை அதிகாரிகள். குற்றம் இழைக்கும் காவலர்களை அவர்களின் உயர் அதிகாரிகளே காப்பாற்றி விடுகின்றனர் என இந்திய காவல்துறை மீது அடிக்கடி குற்றஞ்சாட்டப்படுகிறது.

© 2016 Reuters

hrw.org